திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, 19-ம் தேதி இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்தேன். ஒன்றைத்தள்ளிவிட்டார்கள். இன்னொன்று.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று கடைசி நாளாக இருப்பதால் நீங்கள் கேட்கின்ற, எதிர்பார்க்கின்ற பதில்கள் இன்றே கிடைக்க வேண்டுமென்பது நியாயம் என்று உணருகிறேன். ஆனால், என் அறைக்குப் பதில் வரவில்லை. பதில் வந்தவுடன் அவையில் வைக்கலாம்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, திருச்சி சிறைச்சாலையில் குடந்தை கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் உண்ணா விரதம் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை ......(மணியடிக்கப்பட்டது).

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இளையாங்குடி பகுதியில் விவசாயிகளிடத்திலே கூட்டுறவு அதிகாரிகள் கடுமையான முறையிலே ஜப்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அது சம்மந்தமாக ஏற்கனவே 42-வது விதியின்கீழ்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்னாலிருந்த உறுப்பினருக்கு சொன்ன பதிலையே இதற்கும் சொல்கிறேன்.

திரு. செ. சிவசாமி: அதோடு, கேரளாவிற்கு ஆடு மாடுகள் அனுப்புவது சம்பந்தமாகவும் நான் 42-வது விதியின்கீழ் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதோடு, சிமெண்ட் கலப்படத்தைப் பற்றி இதே அவையிலே சுட்டிக்காட்டினேன். அதையே காட்டினேன். கெமிக்கல் அனலிசிஸ் பண்ணி பிறகு முடிவைச் சொல்வதாகச் சொல்லப்பட்டது. இதுவரை எந்த விதமான நடவடிக்கையும்......(மணியடிக்கப்பட்டது).

(ஊ) கல்லூரி ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சட்டமன்றத்தின் தொடர் கூட்டம் இன்றோடு முடிவடைகிறது. கடந்த சில நாட்களாக கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்து அது சம்பந்தமாக அரசு தரப்பிலேயிருந்து பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அது வெற்றிகரமாக முடிந்து சமரசம் ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். தோல்வி இன்றைய தினம் பத்திரிகையில் பார்க்கும்போது அது ஆனால்,

1979 பிப்ரவரி 26] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடைந்ததாகக் காணப்படுகிறது. ஆகவே, அந்த வேலை நிறுத்தம் இன்னும் நீடித்துக்கொண்டே போனால் எந்த அளவு மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு நன்றாக அறியும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அதோடு கும்பகோணத்தில் பல ஆசிரியர்கள்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் என்று சொல்லிவிட்டதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். விளக்கமாகப் போகவேண்டாம். நான் அமைச்சரைக் கேட்கிறேன், தயாராக இருந்தால் பதில் சொல்லட்டும். இல்லையென்றால், தாங்கள் அரசின் கவனத்தை ஈர்த்தது போதும், உட்காருங்கள்........

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் வேறு ஏதோ சொல்ல வேண்டுமாம், அவர் முடிக்கட்டும். பிறகு திரு. வரத ராசன் பேசட்டும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் இன்னும் முடிக்கவில்லை அவர் முடிக்கட்டும் உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, லேடி டீச்சர்கள் கைது செய்யப்பட்டு வேலூர் மத்திய சிறைக்கு எடுத்துச் செல்லும்போது சி. ஆர். சி. பஸ்ஸில் இடையில் வழியிலேயே நிறுத்தப்பட்டு இரவு முழுவதும் ரோட்டிலேயே தான் விடப்பட்டிருக்கிறார்கள் என்றும், பெண் போலீஸ் காரர்கள் கூட அவர்களுடன் இல்லாமல் இருந்தார்கள் என்றும் கூறப்படுகிறது, அது சம்பந்தமாக ஆசிரியர்கள் இன்று ஆளுநரைச் சந்தித்து முறையீடு செய்யப்போகிறார்கள் என்றும் தகவல் வந்தது. அது சம்பந்தமாக அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். பிரச்னைகளுக்கு முடிவு காண முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.........

திரு. என். வரதராசன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே மனு கொடுத்திருக்கிறேன். ஆனால் இதை 41 ஆக மாற்றியிருக்கிறீர்கள். நமது அரசு............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங் கள். திரு. சுப்பு...........